## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(10.09.2022 முதல் 14.09.2022)

அறிக்கை எண்: 72/2022 தேதி: 09.09.2022

### திருவாரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31 °செ முதல் 32 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 26 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (10.09.2022 முதல் 14.09.2022)

| கடந்த வார வானிலை (06.09.2022 முதல் 08.09.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (10.09.2022 முதல் 14.09.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 06/09 | நாள்-2 07/09 | நாள்-3 08/09 | தேதி | நாள்-1 10/09 | நாள்-2 11/09 | நாள்-3 12/09 | நாள்-4 13/09 | நாள்-5 14/09 |
| 7.7 | 0.1 | 7.1 | மழை (மி.மீ.) | 4 | 6 | 6 | 4 | 4 |
| 32 | 32 | 31 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 34 | 35 | 35 |
| 26 | 24 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 26 | 26 | 26 |
| 8 | 7 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 4 | 4 | 4 |
| 80-76 | 82-73 | 82-67 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75-65 | 75-65 | 75-65 | 75-65 | 75-65 |
| 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 12 | 12 | 12 | 12 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

### திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 10.09.2022 முதல் 14.09.2022 வரை மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| நெல் | | நெல் நாற்றங்காலில் விதைகள் இடம்பெயர்தலை தவிர்க்க, விதைத்த 2 நாட்களுக்கு மாலை வேலையில் மிதமான அளவில் தண்ணீர் பாய்ச்சவும். |
| | | நெல் நாற்றங்காலில் ஒரு சென்ட்க்கு 2 கிலோ வீதம் டீ.ஏ.பி மேலுரமாக இடவேண்டும். நெல் நாற்றங்காலில் இலைப்பேனை தவிர்க்க விதைத்த 10 நாட்களுக்குள் அசாா்டிராக்டின் 0.03 சதம் (3 மி.லி/லி) ஒட்டும் திரவமான காதி கோபுர பாா் சோப் 3 கிராம் / லி என்ற அளவில் கலந்து நாற்றங்கால் நன்கு நனையும் படி கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளைகளில் தெளித்தல் அவசியம். |
| பொது | | உழவா் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சாா்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறாா்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயில் உலா்த்தி கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்தில் இருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் மிதமான மழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

**இயக்குநா்**